# கதிர்காமனின் இரண்டு மனைவிகள்

## ஸ்ரீலங்காவின் புராணங்களும் சமாதான முயற்சிகளும்

### ஆங்கிலத்தில் மூலக் கட்டுரை :- பேராசிரியர் பால் யங்கர்

### (Kataragama's Two Wives--Mythos and Reconciliation in Sri Lanka by Prof. Paul Younger)

தமிழில் மொழி பெயர்ப்பு - சாந்திப்பிரியா ( nrj_1945@yahoo.com)



தன் மனைவி தெய்வானையை விட்டு தன் மனதிற்கு இனியவளான வள்ளியைத் தேடிப் போகும் கதிர்காமன்

புராண ஐதிகங்களின்படி கதிர்காமன் தேவர்களின் தலைவனான முதல் மனைவியும் இந்திரனின் பெண்ணும் ஆன தெய்வயானை இருக்கும் பொழுதே உள்ளூரில் தன் காதலி வள்ளியுடன் உறவாடிக் கொண்டு இருந்தார். கதிர்காமனைப் பற்றிய பாடப்படும் பாடல்களில் அந்த இரண்டு மனைவிகளுக்கு இடையில் ஏற்பட்டு இருந்த மனத் தாங்கல்களே பெரிதும் இடம் பெற்று இருந்தன.

மதங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு உள்ள கனடா நாட்டைச் சார்ந்த பேராசிரியர், இந்த கட்டுரையில் கதிர்காமனைப் பற்றிய புராணக் கதையினையும் அவருடைய ஆலயங்கள் எப்படி மத நல்லிணக்கங்களை ஏற்படுத்துவதில் தன் சீரிய பங்கை ஆற்றி வருகின்றது என்பதையும் ஆராய்கின்றார்.

கானடா நாட்டில் ஒன்டாரியோ என்ற இடத்தில் உள்ள மாக் மாஸ்டர் என்ற பல்கலைக் கழகத்தில், மதங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு உள்ள கனடா் நாட்டைச் சார்ந்த பேராசிரியர், புரபஸர் பால் யங்கர், கதிர்காமா ஆராய்ச்சி மையத்திற்கும் தன் பங்கிற்கு ஆராய்ச்சிக் கட்டுரைகளை தந்து வருகின்றார்.

ஏசாலாவில் ( ஜூலை மாதம் ) பெவுர்ணமி அன்று துவங்கும் கடவுள் கதிர்காமனின் திருவிழா இரவு வள்ளி அம்மன் ஆலயத்திற்கு புறப்பட்டுச் செல்லும் ஊர்வலத்துடன் துவங்குகின்றது. அந்த ஆலயத்தின் அருகில் உள்ள தெய்வயானை ஆலயமோ எந்த வித சந்தடியும் இன்றி அமைதியாக இருக்கின்றது. அவளுடைய ஆலயத்தில் இருந்து ஸ்வாமிகள் புறப்பட்டுச் சென்று, ஊர்வலம் போகக் கிளம்பும் கடவுளை பாராட்டச்

சென்றாலும், தெய்வயானைக்கு அந்த இரவில் அவள் கணவன் வள்ளியுடன் சென்று உறவாடுவது பிடிக்கவில்லை.

கதிர்காமனைப் போன்றே சிங்கள இனத்தைச் சார்ந்த விஜயா என்ற கதாநாயகருக்கும் இரண்டு மனைவிகள் உள்ளனர். உள்ளூரில் இருந்த இளவரசி குவேனி என்பவள் அவளுடைய வீட்டினரின் எதிர்ப்பையும் மீறி அவருக்கு தங்க இடமும் உணவும் தந்து, முடிவாக அவரையே மணந்து கொண்டு அவர் மூலம் சில குழந்தைகளையும் பெற்றெடுத்தாள். மதுரையைச் சேர்ந்த அவருடைய மற்றோரு மனைவியும் அங்கு வந்த பொழுது தன்னுடன் சிறந்த தொழில் நுட்பம் வாய்ந்தவர்களை அழைத்து வந்திருந்தாள்.

அதுவரை ஸ்ரீலங்காவில் ஒரே வீட்டில் இரண்டு பரம்பரையினரும் ஒன்றாகவே வசிக்கலாயினர். குவேனியின் மக்கள் பெரும்பான்மை இனத்தவராக மாறி சிங்கள மொழியைப் பேசினாலும் உள்ளூர் மனைவியான தன்னுடைய வள்ளியுடன் மகிழ்ச்சியுடன் சேர்ந்து இருந்த கதிர்காமனையும் ஏற்றுக் கொண்டு இருந்தனர். ஆனால் மதுரையைச் சேர்ந்தவளின் வம்சாவளியினரோ தெய்வானையை ஏற்றுக் கொண்டபடி பழமை பண்பாட்டுக்களுடனேயே வாழ்ந்து கொண்டு இருந்தனர்.



தேவ சேனாபதியாக தோற்றம் தரும் கதிர்காமன்

*கதிர்காமப் பண்டிகை இரு மனைவிகளும், அவர்களின் சொந்த பந்தங்களுடனும் நண்பர்களுடனும் ஒன்று சேர்ந்து மகிழ்வுடன் பண்டிகைகளைக் கொண்டாடும் ஒரு நிகழ்ச்சியாக இருக்க வழி வகுக்கின்றது. யானை மீதேறி பவனி வரும் கடவுளின் ஊர்வலத்தில் எழுப்பப்படும் நாட்டியங்களும், இன் இசை நிகழ்ச்சிகளும் அதில் பங்கேற்பவர்களைப் பரவசப் படுத்துகின்றது.*

அந்தப் பண்டிகையின் முக்கிய அம்சம் வள்ளி மீது கதிர்காமன் கொண்டுள்ள காதலின் பொழுது அவளுக்குத் துணையாக நின்ற வள்ளி வம்சத்தைச் சேர்ந்த மலை வாழ் மக்களில் உள்ள அலாட்டி அம்மா என்ற தாய்மார்கள் தங்களின் கைகளில் விளக்குகளை ஏற்றிக் கொண்டு ஊர்வலத்தில் செல்வதேயாகும். இன வேறுபாடுகள் இருந்தாலும் , பயங்கரவாதம் தலைத் தூக்கி இருந்தாலும், பழைய உறவுகள் அத்தனை என என்று பறை சாற்றும் விதத்தில் இன்றும் உள்ளனர்.

சுலபத்தில் விடுபடுவது இல்லை என்பதே உண்மை சிங்களவர்கள் இந்திய கலாச்சாரங்களை மதித்தபடியே

ஊர்வலத்தின் காவல் பணியில் இருக்கும் அலாட்டி என்ற தாய்மார்கள், தங்கள் கைகளில் விளக்குகளை ஏந்தியபடி கதிர்காமன் முன்னால் நடந்து சென்று தங்களுடைய இனப் பெண் சரிவர நடத்தப் படுகின்றாளா என்பதை கண்காணித்தபடி செல்வார்கள். 1989 ஆம் ஆண்டில் அப்படி நடந்த ஊர்வலம் ஒன்றின் மீது வெடி குண்டுகள் வீசப்பட்டு ஐந்து தாய்மார்கள் இறந்தனர். அனாலும் அவர்களுடைய சகோதரிகளும் பெண்களும் அதைப் பற்றிக் கொஞ்சும் கூட கவலைப் படாமல், என்ன வந்தாலும் சரி என இன்னமும் தீவீரமாக தங்களுடைய பாரம்பரிய வழக்கத்தை பாதுகாக்கும் வகையில் ஊர்வலத்தில் பங்கேற்று வருகின்றனர்.

## சடங்குகள்

ஆனால் மற்றோரு மனைவியின் கதி என்ன ? கிழக்குப் பகுதியில் பழைமை கால பழக்க வழக்கங்களைக் கொண்டு வாழ்ந்து வரும் இந்து மக்களால் கட்டப்பட்ட ஆவலயத்தில் குடி கொண்டு உள்ளாள் தெய்வயானை அம்மன். அதனால்தான் தன்னுடைய இஷ்ட சக்தியான வள்ளியுடன் உறவாடப் போவதிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும், தன்னுடைய துக்கத்தை வெளிப் படுத்தும் விதத்திலும் அவள் அந்த விழாக்களில் கலந்து கொள்வதில்லை. தெய்வானையோ கிரியா சக்தியைப் ( முருக வழிபாட்டின் பிரார்தனை, சடங்குகள் முதலியன நன்கு நடைபெற உதவும் சக்தி ) பெற்றிருந்தபடியால் கதிர்காமன், உலகில் தான் செய்யும் பல நல்ல காரியங்களை அவள் மூலமே செய்து வருகிறார். வம்சாவளியாகத் தொடரும் பழக்கப்படி வட இந்தியப் பகுதிகளில் இருந்து நன்கு பண்டிதம் பெற்ற வல்லுனர்கள் அங்கு வந்து பெரிய அளவில் தெய்வானையின் ஆலயத்தின் சடங்குகளை நடத்தி வைக்கின்றனர் .

1990 ஆம் ஆண்டில் தெய்வானை ஆலயத்தில் நடந்த நிகழ்ச்சிகள் வருந்தத் தக்கவையாகும். ஸ்ரீலங்க படையினரின் கெடுபிடியான நடவடிக்கைகளினால் வைதீக வழக்கங்களைக் வைத்துக் கொண்டிருந்த பல இந்துக்களால் தெய்வானையின் ஆலயத்தில் பண்டிதர்கள் வந்து நடத்தி வைத்த வைதீகக் காரியங்களில் கலந்து கொள்ள முடியாமல் போய் விட்டது. ஆனாலும் அதிருஷ்டவசமாக மக்களால் துவக்கி வைக்கப்பட்ட காவடி ஆட்டங்களும் , தீ மிதிக்கும் விழாக்களும் இன்றும் தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கின்றன. கதிர்காமனின் ஐதீகத்தன்படி இரண்டு மனைவிகளுமே முக்கியமானவர்கள். கதிர்காமனின் அளவற்ற அன்புக்கு முதலில் பாத்திரமானவள் வள்ளிதான் என்பதில் எந்த ஐயமும் கிடையாது. ஆனால் தென் இந்தியப் பகுதிகளில் இருந்து வந்தவர்களும் கதிர்காமனை ஏற்றுக் கொண்டு உள்ளதால், அங்குள்ள பழக்கங்களை ஏற்றுக் கொண்டு விழாக்களில் பங்கேற்கின்றனர். முக்கியமாக தமிழ் இன மக்களே அங்கு நடக்கும் பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டு உள்ளனர். ஆனால் அவர்கள் கதிர்காமக் கடவுளின் பண்டிகைகளில் மீண்டும் திவிரமாகப் பங்கேற்று பண்டைய பண்பாட்டைக் காப்பாற்றுவார்கள் என நம்பலாம்.

## சமாதான முயற்சிகள்

வள்ளி ஆலயத்தை கதிர்காமனின் ஊர்வலம் நெருங்கும் பொழுது பக்கத்தில் அங்கு பக்கத்தில் உள்ள மசூதியில் இருந்தும் ஆலயங்களில் இருந்தும் பக்தர்கள் வெளி வந்து ஊர்வலத்தினரை உற்சாகம் ஊட்டுகின்றனர். ஸ்ரீலங்காவில் முருகனின் இரு மனைவிகளுடன்

முஸ்லிம் மதத்தினர் கொண்டிருந்த தொடர்பு பற்றி எந்தப் புராணக் கதைகளிலும் கூறப்படவில்லை என்றாலும் அவர்கள் அந்த இருவருடனும் சகோதரர்கள், சகோதரிகள் என்ற உறவை ஏற்படுத்திக் கொண்டு உள்ளனர். ஏன் ஆலயத்தின் பக்கத்தில் ஒரு மசூதியை அமைத்திருந்தனர் என்பதற்குக் காரணம் தெரியவில்லை என்றாலும் அதுவும் நன்மைக்கே என இப்போது புரிகின்றது. கதிர்காமனின் இன்னொரு மனைவியுடன் தங்களுக்கு உள்ள தகறாறை தீர்த்துக் கொள்ள வள்ளியின் பக்தர்கள் தமிழ் மொழி பேசும் முஸ்லிம் மக்களின் உதவியை நாடுகின்றனர்.

சில காலம் முன் நடந்த ஒரு நிகழ்ச்சி இது. இலங்கையில் நாங்கள் பயணம் செய்து கொண்டிருந்த வாகனத்தில் சிறிய தகறாறுஏற்பட்டது. இரண்டு தமிழ் இன மூதாட்டிகள் அதில் ஏறினர். இரண்டு மணி நேரமாக நின்று கொண்டிருந்த தங்களுக்கு எந்த இளைஞனாவது உட்கார இடம் கொடுக்க மாட்டார்களா என எதிர் பார்த்து நின்ற நேரத்தில் ஒரு முஸ்லிம் மதத்தினைச் சார்ந்தவர் தான் எழுந்து நின்றபடி பயணம் செய்து கொண்டு, அந்த இரு தமிழ் மூதாட்டிகளும் அமர இடம் கிடைக்கும் வண்ணம் உட்கார்ந்து இருந்தவர்களை சரிவர அமரச் செய்தார். நல்லின ஒற்றுமைக்கு அது எடுத்துக் காட்டாக இருந்தது.



மஹாதேவலியில் உள்ள ஆலயத்தில் நன்கு திட்டமிட்டு தினமும் காலை மற்றும் மாலைப் பொழுதில் நடைபெறும் அலாட்டி பூஜையில் பங்கேற்று பூஜிக்கும் அலாட்டி அம்மாக்கள்

கதிர்காம பண்டிகையை ஒவ் ஒரு தலைமுறையினரும் மாறுபட்ட கோணத்தில் நோக்குகின்றனர். ஆயிரம் வருடங்களாக இருந்த ஸ்ரீலங்காவின் சமூகப் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் எடுத்துக் காட்டும் விதத்தில் அமைந்து இருந்தன அந்தப் பண்டிகைகள். குதிர்காமரின் இரண்டு மனைவிகளும் கூட ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்துக் கொண்டு ஒத்துப் போய்க் கொண்டு வருகின்றனர். அதற்கு முஸ்லிம் இன சகோதரர்களும் துணைப் புரிகின்றனர். இப்படிப் பட்ட இந்த பண்டிகையின் மூலமாவது இந்த மகுடம் போன்று விளங்கும் தீப கற்பத்தில் மீண்டும் அமைதி திரும்ப வேண்டும் என்பதே நம் விருப்பம்.